(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் முதுகுளத்தூர் தாலூக்காக்களில் உள்ள அரசு மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளில் உயிர்காக்கும் மற்றும் இதர மருந்துகள் போதிய அளவு இருப்பில் உள்ளது.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதி, முதுகுளத்தூர் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்துகள் கிடையாது. அவற்றை எல்லாம் மதுரை போன்ற பெரிய நகரங்களுக்குச் சென்றுதான் வாங்க வேண்டும். இதுபோன்ற மருந்துகளை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்துகளை அங்கே வைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக்குளத்தூர் மருத்துவமனை மிகவும் சுகாதார கேடு உடையதாக, சுகாதாரம் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது அதிலும் குறிப்பாக அங்கே இருக்கின்ற மகப்பேறு மருத்துவ மனையின் கட்டிடம் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறது. நானும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. த. இராமசாமி அவர்களும் இதனை நேரடியாகப் பார்த்திருக்கிறோம். ஆகவே அந்தக் கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் கட்டித் தர அரசு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரக் கேடு உள்ளவர்கள்தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். ஆகவே மருத்துவமனையையே சுகாதாரக் கேடாக ஆகி விட்டால் என்ன செய்வது என்பது தெரியவில்லை? எனவே நிதியாதாரத்திற்கேற்ப விரைவில் அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

632 (*வினா எண். 12253)—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி எல்லா வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்காட்டுப்பள்ளியில் இருக்கின்ற அரசு மருத்துவமனை ரொம்பவும் தாழ்வான பகுதியில் இருக்கிறது. திருச்சிக்கும், தஞ்சாவூருக்கும் இடையில் அது இருப்பதால் ஏறத் தாழ 40 கிலோ மீட்டர் வரையில் சென்றுதான் பெரிய மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. நகரப் பஞ்சாயத்தாக திருக்காட்டுப்பள்ளி இருக்கின்ற காரணத்தால் அரசு மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்றி அல்லது அதே இடத்திலே அதனை நன்கு விரிவுப்படுத்தி அந்தப் பகுதியில் இருக்கின்ற நோயாளிகளின் குறைகளைப் போக்க உரிய வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகம்.

633—(*வினா எண். 3986)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட விகிதப்படி ஓட்டுநர்களும் நடத்துநர்களும் நிரப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: (அ) ஆம்.

(ஆ) 1–1–1987 நிலவரப்படி ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினர் பணி நிலவரம் கீழ்க்கண்டவாறு :—

பிரிவு.		மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை.	ஆதி/ம.சா. எண்ணிக்கை.	ஆதி/ம.சா. சதவிகிதம்.
ஓட்டுநர்	..	1,525	107	7
நடத்துநர்	..	1,542	385	25

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜாதி அடிப்படையில் அதாவது பி.சி. பார்வர்ட் கம்யூனிட்டி, ஓப்பன் காம்பெட்டிஷன் ஆகிய அடிப்படைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்,